**சுருக்கம்**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை – தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் – 1982 பிரிவு 6–ன்படி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டது – வாரியத் தலைவர் அவர்களுக்கு புதிய சீருந்து வாங்குதல் – பழைய சீருந்தினை கழிவு செய்ய அனுமதி ஆணைகள் வெளியிடப்படுகின்றன

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ஐ2)த் துறை**

அரசாணை (நிலை) எண்.167 நாள்: 03.11.2021

பிலவ வருடம், ஐப்பசி–17
திருவள்ளுவர் ஆண்டு –2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.75, தொழிலாளர் மற்றும் வேலைவாய்பு(ஐ2)த் துறை, நாள் 24.06.2009.
2. மோட்டார் வாகன பராமரிப்பு துறை செ.மு.மூ.மு.எண்.H1/8935/2021, நாள்.10.08.2021.
3. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.W2/183367/2021, நாள் 09.09.2021.

------

**ஆணை:**

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவராக நியமனம் செய்யப்பட்ட திரு. பொன்குமார் அவர்களுக்கு சீருந்து வாங்க 24.06.2009 அன்று அரசு ஆணையிட்டுள்ளதை தொடர்ந்து 2009–ல் வாங்கப்பட்ட TATA SAFARI (TN 01 AS 7777) சீருந்து 12 வருடங்கள் கடந்த நிலையில் தற்போது பயன்படாத நிலையில் உள்ளது என்றும், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை அவர்கள் மேற்கூறிய வாகனத்தை முதிரா நிலையில் கழிவு செய்ய பரிந்துரைத்துள்ளதால் TATA SAFARI TN 01 AS 7777 என்ற சீருந்தை கழிவு செய்ய உரிய அனுமதி ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தொழிலாளர் ஆணையர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனைக்குப்பின், ஏற்று தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் அவர்களுக்கு 2009-ல் வாங்கப்பட்ட TATA SAFARI TN 01 AS 7777 என்ற சீருந்தை முதிரா நிலையில் கழிவு செய்ய அனுமதி வழங்கியும், இச்சீருந்திற்குரிய பதிவு புத்தகத்தினை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வாகனத்தின் ஊர்தி அலுவலர் மூலம் ஒப்புவிப்பு செய்யவும், 09.08.2021-ம் நாளிட்ட தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் ஆய்வறிக்கையில் குறிப்பிட்ட தொகைக்கு குறையாமல் ஏலம் மூலம் விற்பனை செய்து கிடைக்கப்பெறும் தொகையினை உரிய அரசு கணக்குத் தலைப்பின் கீழ் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தினால் செலுத்தப்படவேண்டும் என அறிவுறுத்தியும் அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. கிர்லோஷ் குமார்**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**
முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை-600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை-600 034.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-600 035.
மாநில கணக்காயர் தலைவர், சென்னை-600 018.
மாநில கணக்காயர், தலைவர் (தணிக்கை), சென்னை-600 035.

**நகல்**
நிதித்துறை, சென்னை-600 009.
உள் (போக்குவரத்து) துறை, சென்னை-600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
அரசு செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அ.ந.மு-II)த் துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு /உதிரி நகல். (கோ.எண்.15708/ஐ2/2021)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/11/21
**பிரிவு அலுவலர்**
03.11.21